பக்கங்கள் 25+ 03

# மாலை முரசு

**வடக்கில் செவ்வாயன்று சகல தனியார் பஸ்களும் சேவை முடக்கப் போராட்டம்**

(விரிவான செய்தி 5 ஆம் பக்கம்)

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 13 வெள்ளிக்கிழமை 27.06.2024 | அதிர்வு 328

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# காணிக் கபளீகர வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை

## கடைசி நேரத்தில் உயர்நீதிமன்றம் விதித்தது

## சுமந்திரனின் மனுவின் மீது அதிரடி உத்தரவு

காணி நிர்ணயச் சட்டம் பிரிவு 4 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் உரிய சான்றாதாரங்களுடன் உரிமை நிரூபிக்கப்படாத 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக்கிக் கையகப்படுத்தி, சுவீகரிப்பதற்கு வழிசெய்யும் விதத்தில் 28.03.2025 திகதியிடப்பட்டு வெளியான 2430/25 இலக்க மிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. 04▶



# யாழ். மாநகர சபையில் குழப்பம்!

## நியதிக் குழுக்களை நியமிப்பதில் ஒருமித்த கருத்தின்மை





(எஸ்.நிதர்ஷன்)

நியதிக் குழுக்களை நியமிப்பதில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தின்மையால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் விசேட அமர்வின் போது குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வின் தொடர்ச்சியாக இன்று விசேட அமர்வுக்காக கடந்த 23 ஆம் திகதி யன்று திகதியிடப்பட்டிருந்தது.

அதனடிடையில் இன்று காலை மேயர் மதிவதனி தலைமையில் 04▶



# வவுனியா வடக்கு பிரதேச சபையை இன்று கைப்பற்றிய தமிழரசுக் கட்சி

## தவிசாளராக திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி தெரிவு

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் ஒருவரைப் பிரேரேரிக்குமாறு கோரப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி பிரேரிக்கப்பட்டார். தேசிய மக்கள் சக்தி சார்பில் ஞானமுத்து அகிலன் பிரேரிக்கப்பட்டார்.

தவிசாளராக இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பின் மூலம் அதனைத் தெரிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் வாக்கெடுப்பை இரகசியமாகவா அல்லது பகிரங்கமாகவா நடத்துவது என ஆணையாளரால் கோரப்பட்டது

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அல்லது இரகசிய வாக்கெடுப்பா அல்லது பகிரங்க வாக்கெடுப்பா என்பதை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடத்துமாறு கேட்டனர். அதற்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் இரு உறுப்பினர்கள் என 8 பேர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்திருந்தனர்.

சபையில் மீதம் 15 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்கள் அனைவரும் தெரிவுகளைப் பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட கிருஸ்ணவேணிக்கு 15 வாக்குகள் ஆதரவாகக் கிடைக்கப் பெற்றன. அவருக்குத் தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும், சங்கு கூட்டணியின் 3 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 வாக்குகளும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்சின் 4 வாக்குகளும், சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்குமாக 15 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன.

வெற்றி பெறுவதற்கு 12 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 15 வாக்குகள் கிடைக்கப் பெற்ற கிருஸ்ணவேணி புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதனின் பெயர் பிரேரிக்கப்பட்டது. உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் சஞ்சுதன் போட்டியின்றி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.





# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையும் பல கட்சிகளின் ஆதரவுடன் தமிழரசு வசம்!

## தவிசாளராகப் பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தெரிவு

**(கி.வசந்தன்)**

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேநேரம் சங்கு கூட்டணியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரி உப தவிசாளராகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாலேந்திரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த கார்த்தீபன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் 9 பேர் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

சபையில் மீதம் 18 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்களில் 17 பேர் தெரிவுகளை பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது. அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட பாலேந்திரனுக்கு ஆதரவாக 17 வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

அவருக்குத் தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும், சங்குக் கூட்டணியின் 3 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் 3 வாக்குகளும், ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் 2 வாக்குகளும், ஈ.பி.டி.பியின் ஒரு வாக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு வாக்கும், சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்கும், சுயேச்சைக் குழுவின் ஒரு வாக்குமாக 17 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன.

வெற்றி பெறுவதற்கு 14 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 17 வாக்குகள் கிடைக்கப் பெற்ற பாலேந்திரன் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக சங்குக் கூட்டணியின் பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரியின் பெயர் பிரேரிக்கப்பட்டது.

உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் கோணேஸ்வரி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணியின் ஒரு உறுப்பினர் தவிசாளர் தெரிவின் போது நடுநிலை வகித்திருந்தார்.







# கொழும்புத் துறைமுக நகரக் கடலில் மூழ்கி மாயமான பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

கொழும்புத் துறைமுக நகர செயற்கை கடற்கரை பகுதியில் கடல் உயிரனங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி காணாமல்போன பல்கலைக்கழக மாணவனின் சடலம் இன்று வெள்ளிக் கிழமை கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர செயற்கை கடற்கரை பகுதியில் நேற்று வியாழக் கிழமை காலை சக பல்கலைக்கழக மாணவர்களுடன் கடல் உயிரி னங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த மாணவன் ஒருவரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடலினுள் நீந்திக் கொண்டிருந்த நிலையில் காணாமல்போன மாணவன் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப் படுத்தியதை அடுத்து சுழியோடிகளின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகள்



தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், இன்று பிற்பகல் மாணவனின் சடலம் கொழும்பு துறைமுக நகர கடற்கரையில் கரை யொதுங்கிய நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

24 வயதுடைய அஸ்கிரிய கம்பஹா பகுதியைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று வந்த மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் குழுவொன்று பொழு துப் போக்குக்காக ஸ்னோர்கெல் என் னும் நீரினுள் சுவாசிக்க உதவும் கருவியை அணிந்து கடலின் உற்ப குதியை பார்வையிட்ட போதே, குறித்த மாணவன் காணாமல்போயுள்ளமை விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மேலும் அம் மாணவன் அணிந்தி ருந்த ஸ்னோர்கெல் கருவி உயிர் பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டெடுக் கப்பட்டுள்ளதுடன், கொழும்பு துறைமு கப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

## காணிக் கபளீகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வர்த்தமானி அறிவித்தல்படி காணிகளை நிரூபிப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிந்து, அவற்றை அரசு சுவீகரிப்பதற்கான அதிகாரம் அந்த வர்த்தமானியின் கீழ் அரசுக்கு வருவதற்கு சுமார் பன்னிரண்டு மணி நேரமே இருக்கையில் – கடைசிக் கட்டத்தில் – இந்த உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டதரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் யஸந்த கோதாகொட, சம்பத் அபேகோன் மற்றும் சம்பத் விஜயரத்ன உள்ளிட்ட நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை இன்று முற்பகல் பிறப்பித்தது.

மேற்படி வர்த்தமானியின் கீழ் காணி சுவீகரிப்பு அதிகாரம் இலங்கை அரசுக்கு இன்றுநள்ளிரவுக்கு பின் வரவிருக்கையில் இந்த மனு இன்று காலை உயர்நீதி மன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவையின் முடிவை அரசு தரப்பு கேட்டு, அறிந்து உயர்நீதிமன்றத்துக்குத் தெரிவிப்பதற்காக

வழக்கு இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

வழக்கு இன்று மன்றில் எடுத்துக்கொள் ளப்பட்டதும் அமைச்சரவையின் முடிவு குறித்து நீதியரசர்கள் அரச தரப்பு சட்டத் தரணியிடம் விசாரித்தனர்.

மேற்படி வர்த்தமானியை கை வாங்கு வதாக அமைச்சரவை முடிவு செய்தி ருக்கின்றது என்று அரசுத் தரப்பு தெரி வித்தது.

கைவாங்கும் வர்த்தமானி அறிவித்தல் எப்போது வெளியாகும் என்று நீதிமன்றம் வினவிய போது பெரும்பாலும் இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு அது வெளியாகும் என அரசுத் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

அரசு தரப்பில் உறுதியான – தீர்க் கமான – மாறாத முடிவாக அதனை அரசு தரப்பு சட்டத்தரணிகள் உறுதிப் படுத்துவார்களா என உயர்நீதிமன்றம் விசாரித்த போது அதற்குத் தெளிவான பதில் அரசு தரப்பு சட்டத்தரணிகளால் முன்வைக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. தங்களுக்குக் கிடைத்த வழிகாட்டல் குறிப்பில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று அரசு தரப்பில் கூறப்பட்டதனால், அந்தப் பதிலில் திருப்தி காணாத நீதியரசர்கள் வழக்கின் வாதத்தைத் தொடர்ந்து முன்வைக்குமாறு மனுதாரர் தரப்பு சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி க.கனகேஸ்வரனைக் கேட்டுக்கொண் டனர்.

இதையடுத்து கனகேஸ்வரன் தமது வாதத்தை முன்வைத்தார். அதனை ஏற்றுக்கொண்டு மேற்படி வர்த்தமானியின் நடைமுறையாக்கத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து வழக்கை ஜூலை இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத் தது.

அடுத்த தவணை வழக்கு எடுக்கப்படும் போது மேற்படி வர்த்தமானி அறிவித்தல் விலக்கப்பட்டிருந்தால் அது பற்றிய புதிய வர்த்தமானி அறிவித்தலை மனுதாரருக் கும் நீதிமன்றத்துக்கும் சமர்ப்பிக்கும்படி அரசு தரப்புக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அடுத்த தவணை வழக்கு எடுக்கப்படும் சமயத்தில் மேற்படி சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தல் விலக்கப்பட்டு இருக்குமானால் வழக்கை அத்துடன் – அன்றைய தினத்துடன் – முடிவுக்கு கொண்டு வர உயர்நீதிமன்றம் தன்னு டைய இசைவைத் தெரிவித்திருந் தது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் மனுதாரர் சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான க. கனகேஸ்வரன், விரான் கொறேயா மற்றும் சட்டத்தரணிக ளளான பவானி பொண்சேகா, லக்ஷ்மணன் ஜெயக்குமார், நிலோஷன் ரவீந்திரன், பெனிஸ்லஸ் துஷான் ஆகியோர் ஆஜராகினர்.

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் விசேட அமர்வு ஆரம்பமா னது.

கூட்டம் ஆரம்பமான நிலையில் கடந்த வாரம் ஏற்பட குழப்பத்தால் ஒத்திவைக் கப்பட்ட சுகாதாரக் குழுவுக்கான உறுபி னர்கள் தெரிவு நடைபெற்றது.

அதன் பின்னர் மேலும் சில குழுக்க ளுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டனர்.

குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு முடிந்தவுடன் கூட்டத்தை முடித் துக்கொள்வதாக மேயர் அறிவித்து சபையில் இருந்து வெளியேறினார்.

இந்நிலையில், சபையின் உறுப்பினர் தர்சானந்த்,

“கடந்த 23 ஆம் திகதிய கூட்டத்தில் சுகாதாரக் குழுவில் உள்வாங்கப்பட உறுப்பினர்கள் குறித்து ஏற்பட்ட இணக்க மின்மையால் கூட்டம் நிறுத்தப்பட்டு இன்று அதன் தொடர்ச்சி நடைபெற்றது. ஆனால், அன்று குழப்பத்தை ஏற்படுத்திய அதே தெரிவுகள் இன்று ஏற்றுக் கொள் ளப்படுள்ளன. இது எவ்விதத்தில் நியாயமானது.? எமக்கு எமது கருத்துக் களைக் கூற சபையில் சந்தர்ப்பம் வழங் கப்பட வேண்டும். கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டாம்.” – என்று கோரிக்கை விடுத்து சபையின் குறுக்கே சென்று மேயர் வெளியேறுவதைத் தடுத்ததால் குழப்பம் ஏற்பட்டது.

ஆனாலும், மேயர் வெளியேறியதால் தமக்கு தமது எதிர்ப்பைக் காண்பிக்க நியாயம் கிடைக்கவில்லை எனவும், இது சபையின் நன்மைக்கு ஏற்றதல்ல எனவும் தர்சானந்த் குறிப்பிட்டார்.



### இ.போ.சவுடன் முரண்பாடு:

# வடக்கில் செவ்வாயன்று சகல தனியார் பஸ்களும் சேவை முடக்கப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணம் தழுவிய சேவை முடக்கல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண தனியார் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற கால அட்டவணைக்கு முரணான சேவை ஒன்றால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. தரப்பினரிடையே குழப்ப நிலை ஏற்பட்டது.

இதையடுத்து சில நிமிடங்கள் வாகன நெரிசல் ஏற்பட்டதையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர்,

"யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சி சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்று குறித்த சாலை முகாமையாளரின் உத்தரவுக்கமைய சட்டவிரோத சேவையை வவுனியா நோக்கி முன்னெடுக்க முயன்றது.

இதை அவதானித்த நாம் குறித்த சட்டவிரோதச் செயற்பாட்டை கண்டித்து அதை நிறுத்துமாறு வலியுறுத்தினோம். ஆனால், இ.போ.சவினர் அடாத்தாக சேவையை முன்னெடுக்க முயன்றனர்.





ஏற்கனவே இந்தச் சட்டவிரோதம் குறித்து துறைசார் தரப்பினரிடமும், போக்குவரத்து அதிகார சபை, துறைசார் அமைச்சு, வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடமும் முறையிட்டிருந்ததுடன், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்திருந்தோம். ஆனாலும், இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையே காணபடுகின்றது.

அத்துடன் இ.போ.சவினர் அடாத்தாக சட்டத்துக்கு முரணாக செயற்படுவதுடன் தனியார் போக்குவரத்துச் சேவையை முடக்கவும் முயன்று விபத்துக்கள் ஏற்படுவதற்கும், முரண்பாடுகளை உருவாகுவதற்கும் வலிந்து இழுக்கின்றனர்.

எனவே, இவ்வாறான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்தும், அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி தனியார் பஸ்களின் பாதுகாப்பான சேவையை உறுதி செய்வதற்காகவும் எதிர்வரும் செவ்வாயன்று வடக்கு மகாணம் தழுவிய ரீதியில் முழுமையான சேவை முடக்கல் போராட்டம் ஒன்றை நாம முன்னெடுக்கவுள்ளோம்." – என்றார்.



# மாந்தை கிழக்கு பிரதேச சபையும் தமிழரசு வசம்

## தவிசாளராக இராசையா நளினி தெரிவு

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது.

இதேநேரம், உப தவிசாளர் பதவியை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அதிகாரப் பதவிகளுக்கான தெரிவு நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கான பகிரங்க வாக்கெடுப்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இராசையா நளினி 7 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஆதர வாக ஐக்கிய மக்கள் சக்தியும் வாக்க ளித்தது.

உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சத்தியவரதன் 6 வாக்குகளைப் பெற்று தெரிவானர்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன தலா 2 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமத்தில் களைகட்டிய பெரஹரா!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுச்சிறப்பு மிக்க கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழாவின் முதல் நாள் பெரஹெரா நேற்று (26) வியாழக்கிழமை இரவு கோலாகலமாக இடம்பெற்றது.

முதல் நாளிலேயே பெரஹரவை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு களித்தனர்.

திருவிழா தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெற்று இறுதி மகா பெரஹரா ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

11 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம் பெற்று இவ்வருட திருவிழா நிறை வடையும்.











## பலாலி சந்தையை விடுவிக்க வேண்டும்

# வலி. வடக்கு பிரதேச சபையில் இன்று நிறைவேறிய தீர்மானம்

யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கன்னி அமர்வு இன்று (27) பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தவிசாளர் தனது தலைமை உரையில் தெரிவித்ததாவது,

எங்களுடைய மக்கள் இன்னும் 2400 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றார்கள்.

அவர்களை மீள்குடியேற்றுவதற்காக எங்களுடைய சபையால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கின்றது.

எங்களுடைய பல உறுப்பினர்கள் கூட தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் தமது சொந்த நிலங்களுக்கு சென்று இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கு நாங்கள் அவர்களுக்கான நிலங்களைப் பெற்றுக் கொடுப்பதோடு, அந்தப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தை தொடர்ந்து நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களையும் நாங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்ற அமைச்சால் 182 மில்லியனுக்கும் மேற்பட்ட ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதற்கான வேலை திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படால் இருக்கின்றன.

எங்களுடைய சபையின் பக்கமும் ஒரு சில தவறுகள் இருக்கின்றன, அதற்கான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப் படாத நிலையில் இருக்கின்றன. நாங்கள் சபையை பொறுப்பெடுத்த பின்னர் அதனை விரைவு படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது.- என்றார்.

தொடர்ந்து சபைக்கான நிலையியல் குழுக்கள் அமைக்கப்பட்டன. பின்னர் சபையில் சில தீர்மானங்களும் எடுக்கப் பட்டன.

இதன்போது பிரதேச சபைக்கு சொந்தமான பலாலி சந்தையை விடுவித்து தருமாறு கோரி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் மாவட்ட இராணுவ தளபதிக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் எழுத்து மூலம் அனுப்பப்படும் என்று சபையில் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கடந்த 2023 ஆம் ஆண்டு விடிவிக்கப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தை மீள அமைப்பதற்கு விரைவில் அதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சத்தியப்பிரமாணம்!





(அபு அலா )

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் தெரிவு செய்யப்பட்ட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 33 உறுப்பினர்களின் சத்தியபிரமாணம் மற்றும் பைஅத் நிகழ்வு கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் இடம்பெற்றது.

கட்சியின் பிரதி அமைப்பாளரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.உதுமா



லெப்பையின் ஏற்பாட்டில் அட்டாளைச் சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் ஸ்தாபக செயலாளரும், பிரதித் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# யாழ்ப்பாண மாநகர சபைக்கு எதிராகக் கண்டன தீர்மானம்!

## வலி. மேற்கு பிரதேச சபையில் இன்று நிறைவேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாநகர சபையின் கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள குப்பை மேடு தொடர்ச்சியாகவும் அது எரியூட்டப்படுவது தொடர்பிலும் வலிகாமம் மேற்கு பிரதேசம் சுகாதார சுற்றாடல் பாதிப்புக்கு உள்ளாவதைச் சுட்டிக்காட்டியும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் யாழ். மாநகர சபைக்கு எதிராகக் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் இன்று (27) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது திண்மக்கழிவு விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த தவிசாளர், கல்லூண்டாய் வெளி குப்பை மேடு தொடர்ச்சியாக எரியூட்டப்படுவதால் எமது பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியை யாழ்பாணத்துக்குப் பிரதான வீதியாக மக்கள் பயன்படுத்துகின்றார்கள். இந்த நிலையில் சுவாச நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் அயல் பிரதேசங்கள் சுற்றாடல் பாதிப்புக்கு உள்ளாகும் சூழலும் காணப்படுகின்றது.

ஆகவே மாநகர சபைக்கு எமது கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது குறித்து எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் காலங்களில் எமது பிரதேச மக்களின் நலனை கருத்தில் கொண்டு இதனை தடுத்து நிறுத்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்புமாறு சபையிடம் தீர்மானத்தை முன்வைக்கின்றேன்.– என்றார்.





# காரில் எரிந்த நிலையில் ஹோட்டல் உரிமையாளர் சடலமாக மீட்பு!

மஹவ -தியபெடே பகுதியில் உள்ள காட்டில் காருக்குள் எரிந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இதனையடுத்து பொலிஸார் முன்னெடுத்திருந்த முதற்கட்ட விசாரணையில், உயிரிழந்தவர் குருநாகல், மில்லேவ பகுதியைச் சேர்ந்த 49 வயதான ஹோட்டல் உரிமையாளர் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் கடந்த 25ஆம் திகதி தலைமுடி வெட்டுவதற்காக வீட்டை விட்டுச் சென்றிருந்தார் எனவும், எனினும், அவர் வீடு திரும்பாத நிலையில் அவரின் மனைவி தொரடியாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைக்காக அவரது மனைவியை அழைத்து விசாரித்தபோது, கண்டு பிடிக்கப்பட்ட சடலம் அவரது கணவருடையது என அடையாளம் காணப்பட்டது.

இதனையடுத்து, குருநாகல் பொது வைத்தியசாலையில் இன்று பிரேத பரிசோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து மஹவ தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வாய்ச் சவடால் சண்டித்தனம்

இலங்கைத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் பேரினவாதத்தினால் கொன்றொழிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்கள் புதைக்கப்பட்ட இடங்கள் எனக் கூறப்படும் பல மனிதப் புதை குழிகளில் சில அம்பலப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பான உண்மைகள் வெளியாகவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் யாருடையவை என்பதை அடையாளம் காணும் பணிகள் கூட முன்னெடுக்கப்படவில்லை. புலனாய்வுகள் உரிய சர்வதேச நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படவில்லை.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு மனிதப் புதைகுழி தொடங்கி, பல இடங்களில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டனவே தவிர, அவற்றில் புதைந்து கிடந்த உண்மைகள் வெளிப்படுத்தப்படவே இல்லை. மிருசுவிலில் எட்டுத் தமிழர்கள் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பாக மட்டும் ஒரே ஓர் இராணுவச் சிப்பாய்க்கு எதிராக மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அவரும் இப்போது பொது மன்னிப்பில் வெளியில் இருக்கிறார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இப்போது வெளிப்படக் கூடிய உண்மைகளை, முன்னைய மனிதப் புதைகுழிகள் போல மீண்டும் புதைத்து விடாதீர்கள் என்று ஆங்கில நாளிதழ் ஒன்று தன் ஆசிரியர் தலையங்கத்தின் மூலம் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களிடம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றது.

1999 இல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் ஐந்து இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட சமயம் அந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட சோமரட்ன ராஜபக்ஷ என்ற இராணுவக் கோப்ரல் வழக்கின் விசாரணைகளுக்கிடையே செம்மணியில் இவ்வாறு 300 தொடக்கம் 400 பொது மக்கள் இராணுவ மேலதிகாரிகளின் பணிப்புரையின் அடிப்படையில் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற இரகசியத்தை அம்பலப்படுத்தியிருந்தார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில் அத்தகைய 17 பேர் புதைக்கப்பட்ட புதைக்குழி கண்டுபிடிக்கப்பட்டு அந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. ஆனால் அதற்கு மேல் அந்த விடயத்தில் முன்ன நகர்வு எதுவும் இடம்பெறவில்லை. உண்மைகளை வெளிப்படுத்தும் ஆர்வமோ, ஈடுபாடோ, பற்றுறுதியோ தென்னிலங்கை பௌத்த - சிங்கள பேரினவாத அரசுகளுக்கு இது வரை இருக்கவில்லை.

இப்போதும் கூட, இந்த செம்மணி மனித புதைக்குழி எதேச்சையாக வெளிப்பட்டதே தவிர, ஆட்சியாளர்களின் விருப்பின் பேரில் - ஈடுபாட்டில் - அம்பலமான விடயம் அல்ல.

இப்போதும் கூட, இந்த மனிதப் புதைகுழி உண்மைகள் அம்பலமாவதற்கான ஏற்பாடுகளையும் விருப்பையும் ஈடுபாட்டையும் இப்போதைய ஆட்சியாளர்களும் வழங்க முன் வராமல் அதற்கு முட்டுக்கட்டை போடுவார்களாயின் இந்த மனித புதைகுழி விடயமும் இதற்கு முந்தைய பல மனித புதைகுழி விடயங்கள் போல அப்படியே அமுங்கிப் போகும் என்பது தவிர்க்க முடியாத நிலைமையாகும். இதனை அந்த ஆங்கில பத்திரிகை தன்னுடைய ஆசிரியர் தலையங்கத்தில் கோடிகாட்டி இருக்கிறது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், செம்மணி புதைகுழியை ஒட்டிய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்த இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரையும் நாடாளுமன்ற உறுப்பினரையும் வாய்ச்சவடால் சண்டித்தனம் காட்டி, நிலைமையைக் குழப்பி இருக்கின்றனர் சில உணர்ச்சி கொப்பளிப்புப் பிரகிருதிகள்.

இந்தச் சமயத்தில் செம்மணி புதைகுழி உண்மைகளை அம்பலப்படுத்துவதற்கான முயற்சியில் - நகர்வில் - இயலுமானால் அரசுத் தரப்பையும் தந்திரமாக ஏற்றிக்கொண்டு முன் நகர்வதுதான் இலக்கை அடைவதற்கான புத்திசாலித்தனமான தந்திரோபாயமாகும். வெறும் உணர்ச்சிக் கோஷங்களுக்காக இலக்கைக் கோட்டை விட்டு, தொடர்ந்தும் அந்தரிக்கப் போகிறோமா என்பதைத் தமிழர் தரப்புத்தான் தீர்மானிக்க வேண்டும்.



# பொத்துவில் பிரதேச சபையை கைப்பற்றிய முஸ்லிம் காங்கிரஸ்!

## தவிசாளராக முஸர்ப், உப தவிசாளராக மாபிர்

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு செய்யும் கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் பொத்துவில் பிரதேச சபை மண்டபத்தில் இன்று (27) நடைபெற்றது.

நடைபெற்ற தவிசாளர் வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் முன்மொழியப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ். எம். எம். முஷர்ரப் ஏகமனதாகத் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளர் பதவிக்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஏ.மாபிர், தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்நத டீ.சுபோகரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

வாக்கெடுப்பில் டீ.சுபோகரன் 3 வாக்குகளையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.மாபிர் 13 வாக்குகளைப் பெற்ற நிலையில் சபையில் ஏகமனதாக ஏ.மாபிர் உப தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, பொத்துவில் அமைப்பாளரும் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ். வாசித், கட்சியின் மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி.சமால்தீன், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.







# மன்னாரில் அபிவிருத்திப் பணிக்கு மத்திய அரசு நிதி வழங்க வேண்டும்

## மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் கோரிக்கை

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபை பிரிவில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

எனவே மன்னார் நகர சபைக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொள்ள மத்திய அரசு உதவிகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது என்று மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபையில் இன்று வெள்ளிக்கிழமை (27) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர மக்களின் நலன் கருதி நகரின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது முதற்கட்ட பணியாக அமையும். மன்னார் நகரில் கழிவுகளை அகற்றுதல், வடிகான்களை அமைத்தல், உள்ளக வீதிகளை அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களை முதல் கட்டமாக முன்னெடுக்க உள்ளோம்.

கடமையை பொறுப்பேற்று நான்கு நாள்களில் பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளேன். மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மன்னார் பொது விளையாட்டு மைதானம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்போது குறித்த மைதானம் சீர் செய்யப்பட்டு வருகிறது.



நகர சபைக்குச் சொந்தமான உள்ளக வீதிகள் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க உள்ளோம்.வெள்ளத்தால் பாதிக்கப்படும் கிராமங்களுக்கான வடிகால் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பழுதடைந்த நிலையில் உள்ள உள்ளக வீதிகள் சீர் செய்யப் படவுள்ளன.

தரவன் கோட்டை, கீரி வரையிலான பாதை பழுதடைந்த நிலையில் காணப் படுகின்றது. அந்தப் பாதையைச் சீர் செய்ய 55 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த பாதைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் காணப் படும் நிலப்பரப்பில் உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதற்காக முன்னெடுக் கப்படவுள்ள அபிவிருத்தி திட்டத்துக்கு 16 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களை முன்னெடுக் கப்பட்டு வருகின்ற போதும் நகர சபைக்கான வளங்கள் பற்றாக்குறை யாக உள்ளன. ஜே.சி.பி., உழவு இயந்திரம், ஏனைய வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

மத்திய அரசிடம் கோரிக்கை ஒன்றை முன் வைக்கிறேன். பின்தங்கிய மாவட்டமாக உள்ள மன்னார் நகரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் மத்திய அரசின் உதவி எமக்குத் தேவை .


மன்னார் நகர சபையில் ஏற்பட்டுள்ள வாகன பற்றாக்குறையை எமது அமைச்சின் ஊடாக நிவர்த்தி செய்து தர வேண்டும்.

மக்களுக்கான அபிவிருத்தி பணியை முன்னெடுக்க நாங்கள் ஒரு போதும் பின் நிற்கப்போவதில்லை. இந்த மண்ணில் நாசகாரச் செயற்பாடுகள் இடம் பெறவும் நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை.

கனிய மணல் அகழ்வு காற்றாலை மின் உற்பத்தி போன்ற மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டங்களை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

மன்னார் நகரத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீட்டை வழங்குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

மன்னார் நகரில் அகழ்வு செய்யப் படும் திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்கான இடம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தப் பிரச்சினை குறித்தும் மாற்று வேலைத் திட்டங்கள் குறித்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.- என்றார்.



# 8 அடி நீளமுடைய இராட்சத முதலை ஒன்று பிடிக்கப்பட்டது!

(பாறுக் ஷிஹான்)

பாலமுனை வைத்தியசாலைக்கு அருகில் ஊருக்குள் சென்ற முதலை ஒன்றைப் பிடித்த மக்கள் அதனை மரத்தில் கட்டி வைத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட பாலமுனை பகுதியில் மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த மார் 8 அடி நீளமுடையது இராட்சத முதலையே இன்று (27) காலை பிடிக்கப்பட்டது. இது பற்றி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் டேவிட் பைன், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு நேற்று (26) திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சுற்றுலா, மீன்பிடி மற்றும் எரிசக்தி துறைகள் குறித்து தூதரும் ஆளுநரும் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.




# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவில் மரநடுகை

(றிபாஸ்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒலுவில் - பாலமுனை சமுர்த்தி வங்கியுடன் இணைந்து கட்டுப்பாட்டுச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகையும், சிரமானதான நிகழ்வும் நேற்று (26) காலை சமுர்த்தி வங்கியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அப்கர், வங்கி முகாமையாளர் ரீ.கே.றஹ்மத்துல்லா, பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாயல் தலைவர் ஏ.ஏ. அன்சார் (ஆசிரியர்), வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# அனுமதிப் பத்திரத்தில் மோசடி; மணல் ஏற்றிய சாரதிகள் கைது!

(த.சுபேசன்)

அனுமதிப் பத்திரத்தில் மோசடி மேற்கொண்டு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகனங்களை செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸார் தனங்களப்புப் பகுதியில் வைத்து மடக்கினர். அத்துடன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தரை மணல் ஏற்ற வழங்கிய அனுமதிப் பத்திரத்தில் மாற்றம் செய்து ஆற்று மணல் ஏற்றி வந்த நிலையிலேயே பொலிஸார் மூன்று டிப்பர் வாகனங்களது சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# முழங்காவில் மாலைநேர உழவர் சந்தை திறப்பு!

**(எஸ். நிதர்ஷன்)**

பூநகரி பிரதேச சபையின் முழங்காவில் மாலைநேர உழவர் சந்தை மீள திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்பை உருவாக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட மாலைநேர உழவர் சந்தையே உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாலைநேர உழவர் சந்தையின் பெயர்ப் பலகையைச் சபையின் தவிசாளர் சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் திறந்து வைக்க நாடாவை முழங்காவில் விவசாயி ஒருவரும் பிரதேச சபை உறுப்பினரும் வெட்டித் திறந்து வைத்தனர்.

சபையின் தவிசாளர் சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் தனது உரையில், உள்ளூர் விவசாயிகளுக்கான நியாயமான சந்தை வாய்ப்பை உருவாக்கவே மாலை நேர உழவர் சந்தை திறந்து வைக்கப் படுகின்றது.

முழங்காவிலிலிருந்து நாள் தோறும் பத்தாயிரம் கிலோகிராம் வரையில் வாழை தம்புள்ள சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

ஆனால் விவசாயிகளுக்கு உரிய சந்தை வாய்ப்பு ஏதும் கிட்டாத நிலையே தொடர்ந்தும் காணப்படுகின்றது.

திறந்து வைக்கப்பட்டுள்ள மாலை நேரச் சந்தையில் விவசாயிகள் எதிர் வரும் மூன்று மாதங்களுக்கு எத்தகைய கட்டணமுமின்றி தங்கள் உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்யமுடியும் என்று தெரிவித்தார்.

முழங்காவில் பொதுச் சந்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாலைநே உழவர் சந்தை மாலை 4 மணியின் பின்னர் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண தினமன்றே விவசாயிகள் தமது உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.







# சீனாவில் நடைபெறும் செயலமர்வில் இலங்கை தூதுக்குழுவினர் பங்கேற்பு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வொன்றில் கலந்துகொள்வதற்காக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தலைமையிலான இலங்கை நாடாளுமன்றக் குழுவினர் சீன மக்கள் குடியரசுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

சீன மக்கள் குடியரசின் வணிக அமைச்சின் அனுசரணையுடன் சீனாவின் தேசிய அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கான சர்வதேச ஒத்துழைப்பு மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வு கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகியது. ஜுலை 06 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.



சீன நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் பிரதிநிதிகளான ஆளும் கட்சி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைந்துள்ளது.

இதில் ஆளும் கட்சி சார்பில் அமைச்சர் சுனில் குமார கமகே (குழுவின் தலைவர்), நாடாளுமன்ற உறுப்பினர்களான சமன்மலி குணசிங்ஹ, சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர, லெப்டினன்ட் கேணல் (ஓய்வு) பிரகீத் மதுரங்க, அஜித் கிஹான், கிருஷ்ணன் கலைச்செல்வி, தினுந்து சமன் ஏக்கநாயக்க , சட்டத்தரணி பாக்ய சிறி ஹேரத், அபூபக்கர் ஆதம்பாவா, அசோக குணசேன, தனுர திசாநாயக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.



எதிர்க்கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கின்ஸ் நெல்சன், பி.ஆரியவன்ச மற்றும் சட்டத்தரணி அநுராத ஜயரத்ன ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



பதவியணித் தலைமையதிகாரியும், நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, நாடாளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட நாடாளுமன்ற ஒழுங்கு மரபு உத்தியோகத்தர் ரணில் நாயணக்கார, சபை முதல்வர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ சேவை அதிகாரி திலினி துஷாரிகா கமகே ஆகிய அதிகாரிகளும் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தச் செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜுன் 22 ஆம் திகதி நடைபெற்றது. இதில் சீனாவின் தேசிய அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சென் சுவாய், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கடந்த 23 ஆம் திகதி சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைத் தூதுக் குழுவினர், தேசிய மக்கள் காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் பிரதித் தலைவரும், இலங்கை – சீன நட்புறவுக் குழுவின் பிரதித் தலைவருமான வங் கீ யைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் காணப்படும் பரஸ்பர நட்புறவை மேலும் பலப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தூதுக் குழுவினர் சீனாவில் தங்கியிருக்கும் காலத்தில் பெல்ட் அன்ட் ரூட் முயற்சியின் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, நகர்புற அபிவிருத்தித் திட்டங்கள், டிஜிட்டல் பொருளாதாரம், செயற்றை நுண்ணறிவின் மேம்பாடு, உலகளாவிய வலுசக்தி மாற்றம் மற்றும் கார்பன் வெளியேற்றத்தில் நடுநிலைமை வகித்தல் உள்ளிட்டவற்றில் சீனாவின் தேசிய நிலைமை குறித்த உள்ளக விவரங்களை அறிந்துகொள்வார்கள்.

இந்தக் கலந்துரையாடல்கள் சீனாவின் அபிவிருத்தி அனுபவங்கள் குறித்த தூதுக்குழுவின் புரிதலை மேம்படுத்துவதோடு, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை வளர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.




# நாவிதன்வெளி முஸ்லிம் மக்களுக்கு துரோகம் இழைத்தன மரமும், மயிலும்!

## அபூபக்கர் நளீர் காட்டமாகத் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

நாவிதன்வெளி பிரதேச சபை ஆட்சியமைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.பி. நவாஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் நவாஸும் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து கொண்டார்கள்.

அது மட்டுமின்றி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரமுகர்களான எம்.ஏ.தாஹீர் எம்.பி, உயர்பீட உறுப்பினர் எம்.ஐ.எம்.மாஹீர், மாவட்டத் தலைவர் காதர் ஆகியோரும் நாவிதன் வெளிக்கு முஸ்லிம் ஒருவர் உப தவிசாளராக வருவதைத் தடுத்து இந்தப் பிரதேச முஸ்லிங்களுக்கு அநியாயம் செய்து முனாபிக்குகளாக நடந்து கொண்டார்கள் என்று நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் வேட்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சகிதம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அண்மையில் நடைபெற்ற நாவிதன் வெளி பிரதேச சபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதேசங்களில் இருந்து எனது தலைமையிலான சுயேட்சைக் குழு கால்பந்து சின்னத்தில் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒரு ஆசனமுமாக மொத்தமாக நான்கு பிரதேச சபை உறுப்பினர்கள் முஸ்லிம்கள் சார்பில் தெரிவாகியிருந்தனர்.

கடந்த முறை ஏ.கே.சமட் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களைப் பெற்று இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கி பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியைப் பெற்று முஸ்லிம் மக்களுக்கு பல சேவைகளை செய்தார். உப தவிசாளராகவும் சிறிது காலம் பதில் தவிசாளராகவும் பதவி வகித்து நாவிதன் வெளி பிரதேசத்தில் வாழும் சுமார் 35 விதமான முஸ்லிம் மக்களைக் கௌரவப்படுத்தினார்.

சிற்றூர்களுக்காக பெரிய ஊர்களை காவு கொடுக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. தாகீர் தெரிவித்து எங்களின் ஊருக்கு அநியாயம் செய்துள்ளார். இது வரலாற்று துரோகமாகும். இந்தத் துரோகத்தை வரலாற்றில் எப்போதும் மன்னிக்க முடியாது. எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் சிற்றூர்கள் எல்லாம் இவர்கள் ஓரங்கட்டி தகுந்த பாடம் கற்பிக்க முன்வர வேண்டும்

தமிழ் பிரதேச சபை உறுப்பினர்களை மட்டும் இணைத்து நாவிதன்வெளி பிரதேச சபையின் ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள ஒரு முன்னாள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிந்தனைக்கு அமைவாகத் தவிசாளரும், உப தவிசாளரும் தமிழர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் முஸ்லிம் சமூகத்தில் இருந்து ஒருவர் உப தவிசாளராக தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் செயலுக்கு ஆதரவு வழங்கி முஸ்லிம் மக்களுக்கு வரலாற்றுத் துரோகத்தை இழைத்த குறித்த பிரதேச சபை உறுப்பினர்கள் இருவருக்கும் இவர்களின் கட்சிகளுக்கும் அதன் தலைமைகளுக்கும் இன்னும் இதனுடன் தொடர்புடைய முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கும் இந்த இஸ்லாமிய சமூகம் எக்காலத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் மன்னிப்பு வழங்கக் கூடாது

தமிழ் சமூகத்தைச் சார்ந்த முன்னாள் தவிசாளரும் தற்போதைய பிரதேச சபை உறுப்பினருமான அ. ஆனந்தன் தலைமையிலான மூன்று பிரதேச சபை உறுப்பினர்கள் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் இணைந்து நாவிதன்வெளி பிரதேசத்தில் காலாகாலமாக ஒற்றுமையுடன் செயல்படும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவுகள் கசப்புணர்வுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நன்நோக்கத்தின் அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை உப தவிசாளராக தெரிவு செய்ய வேண்டும் என்ற நோக்கோடு மிகவும் அர்ப்பணிப்போடு செயல்பட்டு முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவால் வெற்றியீட்டிய என்னை உப தவிசாளர் பதவிக்கு பிரேரித்தார்கள்.

இந்தத் தெரிவுக்காக நடத்தப்பட்ட வாக்களிப்பில் போது சபையில் இருந்த நான்கு முஸ்லிம் பிரதேச சபை உறுப்பினர்களும் தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவருடன் இணைந்து எனக்கு வாக்களித்திருப்பார்களேயானால் இன்று முஸ்லிம் சமூகம் உப தவிசாளரை பெற்றிருக்கும்.

ஆனால் மரம், மயில் கட்சிகளைச் சேர்ந்த இரண்டு பிரதேச சபை உறுப்பினர்களும் தங்களுடைய வாக்குகளை வழங்கியதன் எனக்கு வழங்காத காரணத்தால் இன்று எமது சமூகம் உப தவிசாளர் பதவியை இழந்திருக்கின்றது.

இது முஸ்லிம் சமூகத்துக்குச் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளால் இழைக்கப்பட்ட மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம்.– என்றார்.



# சுகாதார உத்தியோகத்தர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி செயலமர்வு

(ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களின் கீழ் பணியாற்றும் சுகாதார உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தி பிராந்திய மக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட சுகாதார உத்தியோகத்தர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய மருந்தாளர் திருமதி எஸ்.இந்திரகுமாரால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்தப் பயிற்சிச் செயலமர்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.



பிராந்திய பிரிவுத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# இன, மத, ஜாதி என்று வேறுபாடின்றி திருமலையைக் கட்டியெழுப்புவோம்!

## திருமலை மாநகர முதல்வர் கந்தசாமி செல்வராஜா தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

மூதூரில் நான்கு தசாப்களின் பின் தலைமைப் பதவியை இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது அது போன்று திருகோணமலை மாநகர சபையையும் கைப்பற்றியுள்ளது என்று இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார். திருகோணமலை



மாநகர சபை முதல்வர் தெரிவு கடந்த (23) திங்கட்கிழமை இடம் பெற்றது. இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் இலங்கையில் உள்ள மாநகரங்களில் ஒரு எடுத்துக் காட்டாக இருக்கக் கூடிய வகையில் திருகோணமலை மாநகரத்தை எடுத்துக் காட்டுவோம்.– என்றார்.

திருகோணமலை மாநகர சபையின் மாநகர முதல்வராக கந்தசாமி செல்வராஜா தெரிவாகினார் அவர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில்,

திருகோணமலை மாநகர சபையின் வளர்ச்சிக்கு அனைத்து உறுப்பினர்களும் ஜாதி, மத ,மொழி பேதமின்றி ஒன்றிணைந்து செயற்படுவோம். அனைத்து உறுப்பினர்களின் உதவியை இதற்குக் கோரி நிற்கிறேன். எதிர்காலத்தில் திறம்பட ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் எதிர்பார்க்கிறேன்.– என்றார்.






# ஏறாவூரப்பற்றுப் பிரதேச சபையில் 13 கோடி ரூபா ஊழல் இடம்பெற்றது!

## தமிழரசுக் கட்சி உறுப்பினர் நிலாந்தன் சபையில் தெரிவிப்பு

(பழுவூரான்)

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபைப் பிரிவில் 13 கோடி ரூபா செலவில் போடப்பட்ட வீதி அபிவிருத்தியில் ஊழல் நடைபெற்றுள்ளது என்று தமிழரசுக் கட்சியின் செங்கலடி தளவாய் வட்டார உறுப்பினர் செ.நிலாந்தன் நேற்று வியாழக்கிழமை (26) சபையின் கவனத் துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இது குறித்து எதிர்வரும் சபை அமர் வில் பிரேரணை ஒன்றை முன்வைக்க உள்ளார் என்றும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் கன்னி அமர்வு இடம்பெற்றது.

இதில் எமது பிரதேசத்தின் அபிவி ருத்தி மற்றும் ஊழல் செயற்பாடுகள் குறித்து சபையின் கவனதத்துக்குக் கொண்டு வந்திருந்தேன்.

அதில் மிக முக்கியமாக கடந்த ஏறா வூர்ப்பற்று சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து சபைச் செயலாளரின் அதிகாரத்தில் இருந்த காலத்தில் 13 கோடி ரூபா செலவில் போடப்பட்ட கிரவல் வீதிகளில் ஊழல் இடம்பெற்றுள்ளது. தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகிறது. அதனை எதிர் வரும் சபை அமர்வில் பிரேரணையாக கொண்டு வந்து விசாரணைகள் நடத்து மாறு கோரிக்கை விடுக்கவுள்ளேன். நேரம் போதாமை, மற்றும் இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறித்த விடயம் உள்வாங்கப்படாத நிலையில் அது குறித்து முழுமையாக சபையில் உரையாற்ற முடியவில்லை.

இருந்தும் இது குறித்து இன்று ஊடகங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் இருந்த போது இலங்கையில் நடைபெற இருந்த தேர்தல் ஒன்றை அடிப்படையாக கொண்டு சபையில் சேமித்து வைக் கப்பட்ட 13 கோடி ரூபா நிதியில் வீதிக ளுக்கு அவசர அவசரமாக கிரவல் போடப்பட்டுள்ளது.


ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள 15 சனசமூக நிலை யங்களுக்கு வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதும் குறித்த ஒப்பந்தம் தனிநபர் ஒருவரின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த ஒப்பந்தம் ஊடாக போடப்பட்ட வீதிகள் பலவற்றில் எந்தவித கிரவல் மண்ணும் இல்லை. பல வீதிகளில் கிரவல் மண்ணுக்குப் பதிலாக ஊத்தை மண் போடப்பட்டமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் ஊடாக போடப்பட்ட வீதிகள் பலவற்றைக் காண வில்லை. செலவு செய்யப்பட்ட பணத் தின் பெறுமதிக்கு ஏற்ப வீதிகள் போடப் படவில்லை என்றும் கூறப்படுகிறது.

சபையின் பணத்தை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய தோடு மட்டுமல்லாமல், வழங்கப்பட்ட ஒப்பந்தத்தில் முறைகேடுகள் நடை பெற்றுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இவ்வாறு 13 கோடி ரூபா மக்கள் பணத்தில் ஊழல் நடைபெற்றுள்ளது. இது குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வந்தாலும் சபையில் நடைபெற்ற மேற்படி ஊழல் குறித்து விசாரணைகளை முறையாக நடத்தி உண்மையை வெளிக் கொண்டு வரும் நோக்கில் எதிர்வரும் சபை அமர்வில் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளேன்.- என்றார்.







# என்றும் வாடாத மல்லிகை!

## என்றும் வாழும் டொமினிக் ஜீவா !!



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ஈழத்து இதழியல் வரலாற்றில் சாதனை படைத்த டொமினிக் ஜீவாவின் அகவை நாள் இன்றாகும் (ஜுன் 27) இதனைமுன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)

பல தசாப்தங்களாக வெளிவந்த மல்லிகையின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் கொள்கைப் பிடிப்பு, அவர் உழைப்பு, பொறுமை, விவேகம், பெருந்தன்மை, தோழமை உணர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவையே முக்கியமாகும். தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் இலக்கியப் பாலமாக விளங்கிய டொமினிக் ஜீவா, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடியுமாவார்.

டொமினிக் ஜீவாவின் மல்லிகை, தமிழ் இலக்கியச் சிற்றிதழ்களில் மிக அதிக காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்த மாத இதழாகும்.

மல்லிகை 1966 ஒகஸ்ட் மாதத்தில் இதன் முதல் இதழ் வெளியானது. இதன் ஆசிரியராக டொமினிக் ஜீவா மல்லிகையை ஒரு முற்போக்கு மாத இதழாக வெளியிட்டார். நாற்பதுக்கும் அதிக ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மல்லிகை சஞ்சிகைக்கும், டொமினிக் ஜீவா அவர்களுக்கும் முக்கிய பங்குண்டு. அத்துடன் மல்லிகையின் 400 இற்கும் அதிகமான இதழ்கள் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், பதிப்பாளருமான டொமினிக் ஜீவா இன, மத பேதமின்றி மாற்றுக் கருத்தாளர்களுடனும் நட்பாக தோழமையில் இருந்தவர். மல்லிகை முதல் இதழ் பிறக்கும்போதே (1966) தன்னை ஒரு முற்போக்கு மாத சஞ்சிகை என்று துணிச்சலாகப் பிரகடனம் செய்து கொண்டது. மல்லிகை – டொமினிக் ஜீவா ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி ஆகிய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர். அத்துடன் மல்லிகை பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர் என்ற மகாகவி பாரதியின் வாக்கையும் தனது குறிக்கோள் வாசகமாகப் பொறித்துக் கொண்டார்.

### சாகித்திய மண்டலப் பரிசு

டொமினிக் ஜீவா எழுதிய தண்ணீரும் கண்ணீரும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இவரது "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்" ஈழத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுயவரலாற்று நூலாகும். டொமினிக் ஜீவா எழுதிய சிறுகதைத் தொகுப்புகளான தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகிய நூல்கள் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத் தக்கவையாகும்.

மல்லிகையின் இதழின் முகப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லீம், தமிழகத்துக் கலை இலக்கியகர்த்தாக்களின் உருவப் படங்களைபிரசுரித்து வெகு சனங்களின் மத்தியில் அவர்களைக் கொண்டு சென்ற , டொமினிக் ஜீவா ஈழத்து இலக்கிய வரலாற்றில் பாரிய பங்களிப்பை செலுத்தியுள்ளார்.

டொமினிக் ஜீவாவின் கட்டுரைத் தொகுப்புகளான அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவப் பயணம், நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாள்கள் ஆகிய நூல்களும் பிரபல்யமானவை. அத்துடன் மல்லிகையில் வெளிவந்த இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிங்களச் சிறுகதைகளை ஒன்று சேர்த்து "சிங்களச் சிறு கதைகள்"என்ற பெயரில் நூலாகவும் வெளியிட்டார்.

### மல்லிகைப் பந்தல் வெளியீடுகள்

"மல்லிகைப் பந்தல்" வெளியீடுகளான அந்தக்காலக் கதைகள், அந்நியம், அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும், ஒரு டாக்டரின் டயரியில் இருந்து, நிலக்கிளி, மீன்குஞ்சுகள் ஆகிய நூல்கள் முக்கியமானவையாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இலக்கிய மாதப் பத்திரிகை 'மல்லிகை' நாற்பது ஆண்டுகளாக வெற்றிகரமாக வளர்ந்து முன்னேறியமை எழுத்தாளர் டொமினிக் ஜீவா, இலட்சியத் துடிப்போடும் கடின உழைப்போடும் உற்சாகமாக மல்லிகையை வளர்த்து வந்தார் என்றே குறிப்பிடலாம். சமூக, அரசியல் செயற்பாட்டாளரான அவர் தனி மனிதராக எழுத்தாளர்களை அரவணைத்து மல்லிகையைக் கொண்டு வந்தார். அதன் இதழ்களூடாக எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார். 'உழைப்பது, மல்லிகைக்காக உழைத்துக் கொண்டேயிருப்பது' தான் ஜீவாவின்

தொடர்ச்சி▼

# என்றும் வாடாத மல்லிகை!

## என்றும் வாழும் டொமினிக் ஜீவா !!

தொடர்ச்சி▲

வாழ்க்கையாக இருந்தது.


கடந்த நாற்பது ஆண்டுகளாக வந்துள்ள 'மல்லிகை' இதழ்களை ஒவ்வொன்றாகப் புரட்டி ஆராய்ந்தால், இன்றைய தமிழ் இலக்கியம் மற்றும் திறனாய்வின் வளர்ச்சிக்கு மல்லிகை ஆற்றியுள்ள அருந்தொண்டு நன்கு விளங்கும். குறிப்பாக, திறனாய்வுத் துறையின் வளர்ச்சிக்கு 'மல்லிகை' யின் வாயிலாகக் கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் மற்றும் பல ஆய்வாளரது பங்களிப்பு சாலச் சிறந்ததாகும்.

மறைந்து, மறைக்கப்பட்டு, வாழும் கலைஞர்கள், படைப்பாளிகளை மக்கள் மத்தியில் நேர்மையாக அறிமுகப்படுத்துவதுதான் மல்லிகையின் முக்கிய பணியாக இருந்தது. காத்திரமான பங்களிப்பு. கட்டுரை, கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு, விமர்சனம் எனத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்தன மல்லிகை இதழ்கள் வளம் சேர்த்தார்கள். என்னதான் பாரிய கருத்து வித்தியாசங்கள் படைப்பாளிகளிடையே இருந்தபோதிலும்கூட, மல்லிகை எந்தக் கட்டத்திலும் சின்னத்தனமாகக் குறுகிய பார்வையுடன் நடந்துகொண்டதில்லை.

இதனை டொமினிக் ஜீவா மல்லிகையின் இதழில் தெளிவாக அறிவித்திருக்கிறார். 'நான் சத்தியத்தைப் போல உண்மையானவனாக இருக்க விரும்புகிறேன்' என்பது ஜீவாவின் இதய ஒலி. அவருடைய 'இதய நேர்மையும் இலக்கிய நேர்மையும்' அவரை அறிந்திருப்பவர்களுக்கு நன்கு புரியும்.

**சரித்திரமாகிய மல்லிகை சஞ்சிகை**

டொமினிக் ஜீவா 2021 ஜனவரி 28 மாலை தனது 93 ஆவது அகவையில் கொழும்பில் கோவிட் பெருந்துயர காலத்தில் காலமானார். டொமினிக் ஜீவா இறந்த பின்னர் எமக்கு வெகு தெளிவாகவும் துல்லியமாகவும் ஒன்று தெரியும். சரித்திரத்தில் பேசப்படப் போகும் சஞ்சிகை மல்லிகை என்று. காலம் பல கடந்த பின்னரும் நின்று நிலைத்துப் பேசப்படப்போகும் இதழ் மல்லிகை.




அவரது படைப்புகள் இலங்கைத்தமிழ் இலக்கியத்துக்குவளம்சேர்த்தன. அவரது இலக்கியப்பங்களிப்புகளில் நாம் பிரதானமாகக் கருவதுவது அவரது இதழாசிரியர் பங்களிப்பையே.

மல்லிகையை ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் வாங்கக் கூடிய ஒரு காலம் வரத்தான் போகின்றது என்று இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

# கதிர்காமத்தில் நேற்று இடம்பெற்ற கொடியேற்றம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா கொடியேற்றம் நேற்று (26) வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் புடை சூழ கொடியேற்றம் இடம்பெற்றது.







# போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தால்தான் எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்

## மனுவல் உதயச்சந்திரா தெரிவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக கடந்த 16 வருடங்களுக்கு மேலாக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காக போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எனினும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு வடக்கு – கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த 'நீதிக்கான நீண்ட காத்திருப்பு' எனும் கருப்பொருளில் 'காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க்கதை' ஆவணப்படம் திரையிடலும்,கருத்துப் பகிர்வும் நேற்று வியாழக்கிழமை (26) மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இசைப்பிரியன் தயாரிப்பில் வெளியிடப்பட்ட நீதிக்கான நீண்ட நாள் காத்திருப்பு காணாமல் போனோரின் கண்ணீர்க்கதை ஆவணப்படம் மன்னாரில் வெளியிடப்பட்டது.

வடக்கு – கிழக்கில் உள்ள 8 மாவட்டத்திலும் குறித்த ஆவணப்படம் வெளியிடப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டு வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நிலை வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக தாய்மார் பட்ட கஷ்ட துன்பங்களை ஏனையோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில் மன்னாரிலும் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. இந்த ஆவணப் படத்தைத் தயாரித்த இசைப் பிரியன் இன்று எங்களுடன் இல்லை.

ஆனால் அவர் எங்களுடன் இணைந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராடி குரல் கொடுத்தவர். அவர் மரணித்தாலும் அவர் எங்களுக்காக குரல் கொடுத்தவர். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

கடந்த 16 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காக போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எத்தனையோ பேர் வலு இழந்து விட்டனர்.

எத்தனையோ வருடங்களாக போராடி விட்டோம். எமக்கு நீதி கிடைக்கவில்லை. இதற்குப் பின்னரும் இந்த அரசு காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு நீதியை பெற்றுத் தருமா? என்கின்ற கேள்வி எழுந்துள்ளது. அம்மாக்களும் போராடி சோர்வடைந்து விட்டனர்.

எவ்வாறாக இருந்தாலும் நாங்கள் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும். காலம் தாமதிக்கும் நீதி மறுக்கப்படுகின்ற நீதி என கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு இருக்காது.

வடக்கு – கிழக்கில் எத்தனையோ மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. செம்மணி புதை குழியில் நான்கு வயது முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்களின் எலும்புக் கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஒரு பிள்ளையை ராணுவம் பிடித்துச் செல்லும் போது, தாய் ஒருவர் மேலும் ஒருவரை துணைக்கு அழைத்துச் சென்றிருப்பார். இந்தத் தாய் இவ்வாறு நிலை ஏற்படும்.தன்னை மண்ணுக்குள் புதைப்பார்கள் என்று நினைத்து அங்கே சென்றிருக்க மாட்டார்.

இவ்வாறு சென்றவர்களையே இராணுவம் கொலை செய்து மண்ணுக்குள் புதைத்துள்ளது. அவர்கள் அனைவரும் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் ஒவ்வொருவரும் அதற்காக குரல் கொடுக்க வேண்டும். நீதியையும், நியாயத்தையும் தட்டிக் கேளுங்கள். – என்றார்.

உயிரிழந்த இசைப்பிரியனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, ஆவணப் படமும் திரையிடப்பட்டது. நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்பு, சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.





# முந்தல் திரௌபதியம்மன் ஆலயத்தில் நேற்று நடந்த வெளிக்கொடியேற்றம்!

(உடப்பு-க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம், முந்தல் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வெளிக்கொடியேற்றம் நேற்று (26) காலை இடம்பெற்றது.

கொடிச்சீலையானது தலைவர் நகுலேந்திரன் உட்பட பக்தர்களால் சுமக்கப்பட்டு உள்வீதி, வெளிவீதி வந்து பின்னர் கொடியேற்றம் இடம்பெற்றது.

இந்தக் கொடியானது மகா பாரதத்தில் வரும் அனுமனுக்காக ஏற்றப்படுகின்றது என்று ஐதீகம் உண்டு.

கொடிச்சீலையில் பறக்க விடப்படும் அனுமன் கொடியானது, பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான வீமன் பாரு சாதமலர் பறிப்பதற்காக இந்திரலோகம் செல்கின்றான். வழியில் கிழக் குரங்கொன்றை சந்தித்து, அந்தக் கிழக் குரங்காகிய அனுமனின் வேண்டுதலின் பெயரில் அதாவது நடைபெறவிருக்கும் மகாபாரத யுத்தத்துக்காக பக்க பலமாகவும் வெற்றிக்கு உறுதிணையாகவும் இருந்து அருச்சுணனின் தேர்க் கொடியில் பறக்க விடுமாறு வேண்டுகின்றான் என்றும் கருத்தை விவரிக்கிறது.

அதனை நினைவு கூருவதாகவே இது அமைகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



### பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விவகாரம்:

# எஸ்.சி.ஓ. கூட்டறிக்கையில் கையெழுத்திட இந்தியா மறுப்பு

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) கூட்டறிக்கையில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது. இதனால் கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை.

கடந்த 2001 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்.சி.ஓ) தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

எஸ்.சி.ஓ. அமைப்பின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடு சீனாவின் குயிங்தவோ நகரில் கடந்த 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார்.

மாநாட்டின் இறுதி நாளான நேற்று கூட்டறிக்கையை வெளியிட முடிவு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் இந்த கூட்டறிக்கையில் கையெழுத்திட இந்தியா திட்டவட்டமாக மறுத்துவிட்டது. இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் குறிப்பிடுகையில்,

எஸ்.சி.ஓ. பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டின் இறுதியில் கூட்டறிக்கை தயார் செய்யப்பட்டது. இந்த கூட்டறிக்கையில் பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ரயில் கடத்தல் சம்பவம் குறித்து குறிப்பிடப்பட்டு, கண்டனம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆனால் ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதன்காரணமாக அமைச்சர் ராஜ்நாத் சிங், எஸ்.சி.ஓ. கூட்டறிக்கையில் கையெழுத்திடவில்லை. இந்தியாவின் கடும் எதிர்ப்பு



காரணமாக எஸ்.சி.ஓ. கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.சி.ஓ. மாநாட்டில் பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் பங்கேற்றார். சீனா உட்பட பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு துறை அமைச்சர்களுடன் ஆசிப் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் அமைச்சர் ராஜ்நாத் சிங், பாகிஸ்தான் அமைச்சர் கவாஜா ஆசிபை சந்தித்துப் பேசவில்லை. மாநாட்டின்போது பாகிஸ்தான் அமைச்சரை, அவர் முழுமையாக புறக்கணித்தார்.

முன்னதாக எஸ்.சி.ஓ. மாநாட்டில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசினார். அப்போது பாகிஸ்தானின் பெயரைக் குறிப்பிடாமல் அந்த நாட்டுக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார். மாநாட்டில் ராஜ்நாத் சிங் உரையாற்றுகையில்:

“உலகின் அமைதி, பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக தீவிரவாதம் உருவெடுத்திருக்கிறது. தீவிரவாத அமைப்புகளின் கைகளில் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஒருபோதும் சிக்கக் கூடாது. மேலும் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள், அவர்களுக்கு புகலிடம் அளிப்பவர்களை தனிமைப்படுத்த வேண்டும். சில நாடுகள் (பாகிஸ்தான்) எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தங்களது அதிகாரப்பூர்வ கொள்கையாக பின்பற்றி வருகின்றன. ஒருபுறம் தீவிரவாத செயல்களுக்கு ஆதரவு அளிப்பது, மறுபுறம் தீவிரவாதத்தை எதிர்ப்பது போன்று நடிப்பது என்ற இரட்டை நிலைப்பாட்டை ஒருபோதும் ஏற்க முடியாது

தீவிரவாதத்தின் ஆணி வேரை கண்டறிய வேண்டும். அந்த ஆணி வேரை அறுத்தெறிய வேண்டும். அப்போது தான் தீவிரவாத பிரச்சினைக்கு நிரந்தர முடிவு கட்ட முடியும். தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இந்தியாவை பொறுத்தவரை தீவிரவாதத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம். இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகள் எந்த நாட்டில் (பாகிஸ்தான்) ஒளிந்து இருந்தாலும் வேட்டையாடப்படுவார்கள். இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத முகாம்கள் எந்த நாட்டில் (பாகிஸ்தான்) செயல்பட்டாலும், துல்லிய தாக்குதல் நடத்த துளியும் தயங்க மாட்டோம்.” என்றார்.

# த.வெ.க. மாநில செயற்குழு ஜுலை 4இல் கூடுகின்றது

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம், விஜய் தலைமையில், ஜுலை 4 ஆம் திகதி சென்னை, பனையூரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம், விஜய் தலைமையில், எதிர்வரும் 04.07.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சென்னை, பனையூரில் உள்ள கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில்



நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகத்தின் சார்பாக அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கபூர்வ நடவடிக்கைகள் குறித்தும், நம் வெற்றித் தலைவரின் நிகழ்வுகள் மற்றும் தொடர் மக்கள் சந்திப்புகள் குறித்த திட்டமிடல்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது.

எனவே, கழக சட்ட விதிகளின்படி மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், கழக மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டலப் பொறுப்புச் செயலாளர்கள், கழக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மட்டும் பங்கேற்கும்படி, தலைவர் ஒப்புதலுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஈரான் - இஸ்ரேல் போர் மீண்டும் தொடங்கலாம்

## ட்ரம்ப் எச்சரிக்கை




ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான போர் மீண்டும் விரைவில் தொடங்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அடுத்த வாரம் ஈரானுடன் பேச உள்ளோம். நாங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம் எனக்குத் தெரியவில்லை, ஈரான் மற்றும் இஸ்ரேல் சோர்வாக இருக்கிறார்கள்.

அவர்கள் மிகவும் மோசமாக சண்டையிட்டனர், பின் இருவரும் சண்டையை நிறுத்த முடிவு செய்தனர்.

ஒரு நாள் போர் தொடங்கலாம் என நினைக்கிறேன், அது விரைவில் தொடங்கலாம்.

ஒப்பந்தம் இருக்கிறதா, இல்லையா என்பது பற்றி எனக்கு கவலையில்லை.

அணு ஆயுதம் வேண்டாம் என்று நாங்கள் விரும்புகிறோம் மற்றும் அணு ஆயுதத்தை நாங்கள் அழித்தோம்.” என தெரிவித்துள்ளார்.

# ஈரானின் அணுசக்தி தளங்களுக்கு ஏற்பட்ட சேதம் மிகத் தீவிரமானது





இஸ்ரேலுடனான 12 நாள் போரில் ஈரானின் அணுசக்தி தளங்களுக்கு ஏற்பட்ட சேதம் மிகத் தீவிரமானது என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விடயத்தை ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த தாக்குதலினால் ஏற்பட்ட தாக்கத்தை ஈரான் மதிப்பிடத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சேதம் குறித்த விரிவான மதிப்பீடு ஈரானின் அணுசக்தி அமைப்பின் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் அரச தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

# ஹமாஸ் பொலிஸ் பிரிவை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்

மத்திய காசாவில் உள்ள நகர் ஒன்றில், ஹமாஸ் பொலிஸ் பிரிவை குறிவைத்து இஸ்ரேல் ட்ரோன் தாக்குதல் நடத்தியதில் 18 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்..

இதன்போது, ஹமாஸ் பொலிஸ் படையின் உறுப்பினர்கள் மீது இஸ்ரேலிய ட்ரோன்கள், துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் நடத்தும் உள்துறை அமைச்சகம் இந்த தாக்குதலைக் கண்டித்துள்ளது.

இஸ்ரேல் பொது ஒழுங்கைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த, பொலிஸ் பிரிவுக்கு எதிராக ஒரு புதிய குற்றத்தைச் செய்துள்ளதாக, பாலஸ்தீன உள்துறை அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.





கனடா முரசு

பக்கங்கள் - 03

வெள்ளிக்கிழமை 27/06/2025

## இந்தியப் பெண் மீது கனடாவில் தாக்குதல்



C2



# கனடாவுக்குள் புகுந்த ஈரானியர்களைத் தேடி எல்லை சேவை நிறுவனம் தீவிர விசாரணை

ஈரானின் உயர் அரசு அதிகாரிகள் உட்பட அவர்களுடன் தொடர்புடைய பலர் எவ்வாறு கனடாவிற்குள் நுழைந்தனர் என்பது குறித்து கனடா எல்லை சேவைகள் நிறுவனம் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

ஈரான் பிரஜைகள் சிலர் கனடாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளதாக தகவல்கள் வெளியானதை தொடர்ந்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல், ஈரான் அரசாங்கம் ஒரு தீவிரவாதத்தில் ஈடுபடும் மற்றும் மனித உரிமை மீறல்களில் தொடர்புடைய அரசு என கனடா அரசு அறிவித்திருந்தது.

அதன் காரணமாக, ஈரான் அரசின் சிறப்பான பதவியில் உள்ள யாரும் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட கூடாது என்ற விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.

இதன்படி, கனேடிய குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு இதுவரை 131 விசாக்களை ரத்து செய்துள்ளது.

C2



# கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கான வேலை அனுமதி விதிமுறைகள் மாற்றம்

சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டபின்படிப்பு கற்கை நெறியின் அடிப்படையிலான வேலை அனுமதி தொடர்பான தகுதி நடைமுறைகள் மாற்றப்பட்டுள்ளன.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சு இது குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

பட்டப் பின்படிப்பு கற்கை நெறிகளை தொடரும் சர்வதேச மாணவர்களுக்கு இது வரையில் வழங்கப்பட்டு வந்த 178 கற்கைநெறித்துறைகள்

C2

# ஒன்டாரியோ விபத்து; சிறுவன் உயிரிழப்பு

ஒன்டாரியோ மாகாணத்தின் அல் மொன்ட் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் பாடசாலை பஸ் மோதியதில் 9 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

ஒன்டாரியோ மாகாண பொலிஸார் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர். பாடசாலை முடிவடைந்த பின்னர் சுமார் மாலை 3.40 மணியளவில், சைக்கிளில் சென்ற சிறுவன் பசு மோதியதில் உயிரிழந்துள்ளார்.

டெய்ட் மெக்கென்ஸீ என்ற அரசுப் பாடசாலையின் மாணவரே இவ்வாறு உயிரிழந்தார் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஹோலி நேம் ஒப் மேரி கத்தோலிக்கப் பள்ளி எதிரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தைப் பார்த்த பள்ளி ஆசிரியர்கள், சிறுவனின் உயிரைக் காக்கும் அவசர முயற்சிகள் மேற்கொண்டாலும் முயற்சி வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் மாணவர்களும் ஆசிரியர்களும் அருகில் இருந்தபோது இடம்பெற்றது எனவும் சிறுவனின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துயரச் செய்தி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் அதிர்வையும் துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியப் பெண் மீது கனடாவில் தாக்குதல்

இந்திய இளம்பெண்ணொருவர் கனடாவில் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது மற்றுமொரு பெண்ணால் தாக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில், தற்போது 17 வயதுப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் வின்னிபெகில் பணி முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார் தன்பிரீத் கௌர் (வயது 23).

இந்தியாவின் பஞ்சாபைச் சேர்ந்த தன்பிரீத், திங்கள் கிழமை அதிகாலை பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்திருந்துள்ளார்.

அப்போது, யாரோ தன் பின்னால் ஓடிவரும் சத்தம் கேட்டு தன்பிரீத் திரும்பிப் பார்க்க, ஒரு இளம்பெண் தன்பிரீத்தைக் கீழே தள்ளிவிட்டுவிட்டு, அவரது மொபைல் மற்றும் அடையாள அட்டையைக் கேட்டுள்ளார்.

அந்த பெண்ணுடன் வேறு இரண்டு



ஆண்களும் இருந்தனர் என கூறப்படுகிறது. அவர்கள் தன்பிரீத் தாக்கப்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்திருக்கிறார்கள்.

அந்தப் பெண் இவரை கத்தியால் சரமாரியாகக் குத்தியுள்ளார். தன்பிரீத்துக்கு, இடுப்பு, வயிறு, இடது கண்ணிமை மற்றும் கை ஆகிய இடங்களில் கத்திக் குத்து விழுந்துள்ளது.

அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து தாக்குதலைத் தடுத்து தன்பிரீத்துக்கு உதவியாக அவசர உதவியை அழைத்துள்ளார்கள்.

தன்பிரீத்தைத் தாக்கிய இளம்பெண், அவரது மொபைல், கிரெடிட் கார்டு மற்றும் அடையாள அட்டையை பறித்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், தன்பிரீத்தைத் தாக்கியதாக 17 வயது இளம்பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் மீது தாக்குதல், கொள்ளையடித்தல் முதலான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தன்பிரீத்துக்கு பல அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், கனடா எல்லை சேவைகள் நிறுவனம் மொத்தம் 115 விசாரணைகளை தொடங்கியுள்ளது. இதில் 49 விசாரணைகள் முடிவடைந்துள்ளன, மீதி 66 விசாரணைகள் இன்னும் நடைமுறையில் உள்ளன.

இதுவரை, 20 பேர் ஈரானின் உயர் அதிகாரிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 19 பேர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் அல்லது பரிந்துரைக்கப்பட உள்ளனர்.

இந்த விசாரணைகளில், 3 பேருக்கு நாட்டை விலக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.இதில் ஒருவர் ஏற்கனவே கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்.

2024ம் ஆண்டில், ஈரானின் ஈரானிய புரட்சிகர காவல்படை என்ற அமைப்பு, கனடாவால் தீவிரவாத அமைப்பாக வகைப்படுத்தப்பட்டது, இதனால், இந்த அமைப்பின் உறுப்பினர்கள் மீதும் விசாரணைகள் தொடங்கியுள்ளன.

தற்போது கண்காணிக்கப்படும் சில பேர், ஈரான் அரசாங்கத்திலும், உளவுத் துறையிலும், பாதுகாப்பு அமைப்புகளிலும் பணியாற்றியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கனடா எல்லை சேவைகள் நிறுவன கூற்றுப்படி, ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது, அவர்களால் மேல் முறையீடு செய்யலாம், பாதுகாப்பு மதிப்பீடு கோரலாம். அதனால் தான் பலர் இன்னும் கனடாவில் உள்ளனர், அவர்களின் வழக்குகள் இன்னும் தீரவில்லை.

தற்போது வரை, வழக்குகள் பலருக்கும் நிலுவையில் உள்ளன. ஆனால் ஒரே ஒரு நபரே இதுவரை உடனடியாக நாடுகடத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கும் நிலையில், கனடாவினுள் ஈரானிய புரட்சிகர காவல்படை உறுப்பினர்கள் இருப்பதாக செய்திகள் வெளியாவது அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கனடாவும் அமெரிக்காவும் Five Eyes Intelligence Alliance எனும் உளவுத்துறை கூட்டணியில் உள்ளன. எனவே, ஒரு நாட்டின் மண்ணில் உள்ள எதிரி, மற்றொரு நாட்டுக்கும் பாதுகாப்பு ரீதியாக அச்சுறுத்தலாக அமையலாம்.

ஈரானிய புரட்சிகர காவல்படை கனடா, அமெரிக்கா இரு நாடுகளாலும் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த அமைப்பினரின் ஆட்கள் கனடாவிலுள்ள சூழ்நிலை, அமெரிக்க பாதுகாப்புத் தரவுகளையும் உளவுத் தகவல்களையும் ஆபத்துக்குள்ளாக்கும் வாய்ப்பு உள்ளது என சர்வதேச வட்டாரங்கள் தெரிக்கின்றன.

## கனடாவுக்குள்..


(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கப்பட்டுள்ளன.

இதற்கு பதிலீடாக புதிதாக 119 புதிய கற்கை நெறிகள் இணைக்கப்பட்டுள்ளன.

சுகாதார பராமரிப்பு, சமூக சேவைகள், கல்வி மற்றும் தொழில்துறை போன்ற துறைகளை சேர்ந்த 119 புதிய பாடப் பிரிவுகள் இப்போது தகுதி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

தற்போது நீண்டகால வேலைவாய்ப்பு தேவை இல்லாத துறைகளே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.




# கியூபெக் ஹெலிக்கொப்டர் விபத்தில் காணாமல் போன மூவர் உயிரிழப்பு

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட மருத்துவ ஹெலிகாப்டர் விபத்தில் காணாமல் போன மூன்று நபர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒரு ஏரியில் இருந்து இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக எயார்மெடிக் Airmedic நிறுவனம் மற்றும் மாகாண பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வாட்சியோவ் ஏரி Lake Watshishou பகுதியில் மூன்று சடலங்களை பொலிஸார் புதன்கிழமை இரவு அடையாளம் கண்டுள்ளனர்.

இது மொன்ரியாலில் இருந்து 1,000 கிலோமீற்றர்கள் வடகிழக்கில் அமைந்துள்ள இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உறுதிப்படுத்தல் எங்கள் குழுவை மிக மிகக் கவலைக்குள்ளாக்கியது என எயார்மெடிக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஹெலிக்கொப்டர், கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவ ரீதியாக ஒரு நோயாளியை எடுத்துச்செல்லும் வேளையில் விபத்தில் சிக்கியது.

அந்த நேரத்தில் ஒரு ஆண் குழு உறுப்பினர் மட்டும் பாதுகாப்பாக மீட்கப்பட்டார், அவருக்கு உயிருக்கு ஆபத்தில்லாத காயங்கள் ஏற்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட மூவரில் இருவர் மருத்துவக்குழுவினரான ஊழியர்கள் எனவும் மற்றும் ஒருவர் நோயாளி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 83 வயதில் ஒரு மில்லியன் டொலர் ஜேக்பாட் வென்றார் மூதாட்டி

ஸ்கார்பரோவில் வசிக்கும் மூதாட்டி ஒருவர், தமது 83 ஆவது பிறந்த நாளில் லாட்டரியில் 1 மில்லியன் டொலர் பரிசு வென்று மகிழ்ச்சியில் உள்ளார்.

வர்ஜீனியா ஸபாடா என்ற இந்த மூதாட்டி, கடந்த 40 ஆண்டுகளாக லொடு மெக்ஸ் Lotto Max மற்றும் Lotto 6/49 என்ற இரண்டு லொத்தர் சீட்டிலுப்புக்களிலும் பங்கேற்று வருகின்றார்.

கடந்த ஏப்ரல் 25ம் திகதி நடைபெற்ற Lotto Max சீட்டிலுப்பில் இந்த பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளது.

சீட்டிலுப்பு நடைபெற்று சில நாட்களுக்குப் பிறகு, தன்னுடைய டிக்கெட்டை சரிபார்த்த போது திரையில் காட்டப்பட்ட தொகையை பார்த்து அதிர்ச்சியடைந்ததாக அவர் கூறியுள்ளார்.




"என் இதயத்துடிப்பு வேகமாகியது. நான் கடைக்காரரிடம் 'இது உண்மையா? இது முடியாத விஷயம்' என்று கேட்டேன்," என வெற்றியீட்டிய தருணத்தை நினைவுகூர்ந்தார்.

இந்த வெற்றியை தனது நண்பர்களிடம் கூறியவுடன் அவர்கள் மகிழ்ச்சியில் சுற்றி ஆடியதாகவும் ஸபாடா தெரிவித்தார்.

"இது என் வாழ்நாளிலேயே சிறந்த பிறந்த நாளாக அமைந்துள்ளது. 83வது வயது எனக்கான ஆண்டாகியுள்ளது," எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிறைவேற்றம் தனது வாழ்நாள் ஆசைகளில் ஒன்று எனக் கூறிய ஸபாடா, பெறும் தொகையை தனது குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ளவும், வீட்டு கடனை செலுத்தவும், மேலும் பொருள்களை கொள்வனவு செய்யவும் திட்டமிட்டுள்ளார்.